**லக்கல – பள்ளேகம பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 20 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 22 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லக்கல – பள்ளேகம பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 733,212 கூட்டுத்தொகையான 04 சொத்து மீதிகள் மற்றும் ரூபா 79,000 கூட்டுத்தொகையான 02 பொறுப்பு மீதிகள் மற்றும் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் கிடைத்திருந்த 03 விடயங்களுக்குரிய 79 சொத்து அலகுகளின் பெறுமதி என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 கணக்கு விடயங்களின் பெறுமதி ரூபா 222,518 தொகை அதிகமாகவும், நிலையான வைப்புக் கணக்கின் மீதி ரூபா 117,422 தொகை குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய சில ஆண்டுகளுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 87,864 தொகையான கணக்காய்வுக் கட்டணம் கடன்கொடுத்தோர் மீதியிலிருந்து அகற்றப்பட்டு கணக்கு சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியைப் போல நீர்க்களஞ்சிய இருப்பு மற்றும் மின்சாரக் களஞ்சிய இருப்பு மீதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2002 ஆம் ஆண்டின் போது சபையிலிருந்து இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதியின் அடிப்படையில் கிடைக்க வேண்டிய ரூபா 23,300 தொகையான வட்டி கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 49,995,064 கூட்டுத்தொகையான 11 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 5,013,462 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 1,842,869 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியில் மீளாய்வாண்டின் போது ரூபா 3,449 தொகை வரவு வைக்கப்பட்டு ஆண்டின் இறுதி மீதி ரூபா 1,839,420 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகளை இனங்கண்டு தேவையான சீராக்கங்களைச் செய்து கணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 182,875 கூட்டுத்தொகையான பெறவேண்டிய 04 கணக்கு மீதிகள் மற்றும் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள ரூபா 2,396,973 தொகையான செலுத்தவேண்டிய 02 கணக்கு மீதிகளின் பெறுமதி என்பன மீளாய்வாண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் 06 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 4,234,052 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,580,852 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,643,943 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 5,224,795 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 10,156,554 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 7,516,900 தொகை மாத்திரமே மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபை நிதியத்திலிருந்து ரூபா 2,639,654 தொகை சபை ஊழியர்களின் சம்பளம் செலுத்துவதற்கு செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) மொத்த வருமானத்திற்கும் மொத்தச் செலவினத்திற்குமிடையிலான விகிதம்**

முன்னைய ஆண்டின் நிலைமையுடன் மீளாய்வாண்டின் நிலையை ஒப்பீடு செய்த போது ஏதாவதொரு முன்னேற்றம் காணப்படுகின்ற போதும், ஆண்டின் மொத்த வருமானத்தில் 84 சதவீதமான அளவு மொத்த செலவினமாகக் காணப்படுகின்றமையினால் சபையின் வருமானத்துடன் ஒப்பிடும் போது செலவினம் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் வருமான சேகரித்தலின் முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான மூலம் | 2014.1.1 இல் நிலுவை | 2014 ஆம் ஆண்டின் பற்றுச்சீட்டிடல் | பெறவேண்டிய மொத்தத் தொகை | ஆண்டின் பட்டியலிடல்களில் பெறுவனவு | நிலுவை மீதியில் பெறுவனவு | மொத்தப் பெறுவனவு | 2014.12.31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | 3 = (1+2) | (4) | (5) | 6 =(4+5) | (3-6) |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 77,376 | 260 | 77,636 | 260 | - | 260 | 77,376 |
| வாடகை | 727,722 | 1,277,471 | 2,005,193 | 636,511 | 608,268 | 1,244,779 | 760,414 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | 242,390 | 242,390 | 242,390 | - | 242,390 | - |
| பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 1,353,122 | 1,464,639 | 2,817,761 | 841,255 | 1,353,122 | 2,194,377 | 623,384 |
| | 2,158,220 | 2,984,760 | 5,142,980 | 1,720,416 | 1,961,390 | 3,681,806 | 1,461,174 |

இது தொடர்பாகக் காணப்பட்ட அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) வாடகை**

-----------------------

மீளாய்வாண்டின் போது பற்றுச்சீட்டிடப்பட்ட வாடகை வருமானம் - ரூபா 1,277,471 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 636,511 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

**(ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

-----------------------------------------------

மீளாய்வாண்டிற்காக வருடாந்த வியாபார அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய வியாபாரங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமையினால் பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானங்களை சரியாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

### 2.3.2 ஏனைய வருமானம்

-----------------------------------

2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1980 இன் 56 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களிலிருந்து திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிராத 28 நெல் ஆலைகளில் (உலர் செயற்பாடுகளுடன் காணப்படுகின்ற) பரிசோதனைக் கட்டணமாக ரூபா 3,000 வீதமும், சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 4,000 வீதமும் ரூபா 196,000 கூட்டுமொத்தமாக மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது குறைவாகக் கிடைத்த ரூபா 263,406 தொகையான சம்பள மீளளிப்புப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 செப்தெம்பர் மாதம் ஓய்வு பெற்றுச் சென்ற சபை பாதுகாப்பாளருக்கு ரூபா 24,915 தொகையான சம்பளம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 1975 இன் உள்ளூராட்சி ஓய்வூதிய நியதிச்சட்டக் கோவையின் 36 ஆவது பிரிவின் பிரகாரம் 1993 செப்தெம்பர் 03 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற உள்ளூராட்சி சேவையின் ஓய்வூதியக்காரர்களின் பங்களிப்புப் பணத்திற்காக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,996,975 தொகை ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டியிருந்தது.

(ஈ) பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைத்த 05 வாகனங்களின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 03 வாகனங்களுக்காக மீளாய்வாண்டில் வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) களுகங்கையை மறித்து நிர்மாணிக்கப்படுகின்ற நீர்த்தேக்கத்திற்குள் லக்கல – பள்ளேகம பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் நீரினால் அமிழ்வதனால் புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற மகாவலி செயற்திட்டத்தில் பிரதேச சபைக்காக கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதனால் பிரதேச சபைக்கு அறவிடவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம், வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் நிலுவை வருமானம் என்பவற்றை அறவிடுவதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்றை தயாரித்து அமுல்படுத்துவது தொடர்பில் சபை கவனம் செலுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்ட 17 வேலைகளின் மதிப்பீட்டின் பிரகாரம் பூர்த்திசெய்யப்பட்டமையை உறுதிப்படுத்தி அளவிடை அறிக்கை பெற்றுக்கொள்ளப்படாது ரூபா 15,400,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பின்வரும் வேலைகள் தொடர்பாக 2015 பெப்ரவரி 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வேலையின் பெயர் | நிதி ஏற்பாட்டுத் தொகை | அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் |
| --- | --- | --- |
| கிவுலே வாடிய பேரகெட்டிய வீதி அமைத்தல் | 200,000 | வீதி பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. |
| நாரங்கமுவ பள்ளேஹேன வீதிக்கு கொங்கிரீட் இடல் | 1,000,000 | வேலை விடய இலக்கம் 02 இன் கீழ் வீதிக்கு 51 கனமீற்றர் தடிப்பத்தில் கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 928,863 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், போடப்பட்டிருந்த கொங்கிரீட் இலகுவாக உடைந்து போகின்றமையும், பலம் மிகவும் குறைவாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. |
| றணமுரேகம தம்கெட்டிய விவசாய வீதிக்கு கொங்கிரீட் இடல் | 1,000,000 | வேலை விடய இலக்கம் 04 இன் கீழ் 33 கனமீற்றர் கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 586,707 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும், அந்த வீதியில் போடப்பட்டுள்ள கொங்கிரீட் பலமின்றியிருந்தமையும் இலகுவாக உடைந்து செல்லும் நிலையில் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டன. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 கணக்காய்வுக் குழு

---

பிரதம அமைச்சுச் செயலாளரின் 2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய சீபீசீ/சீஎல்ஜீ/116 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கணக்காய்வுக் குழு உருவாக்கப்பட்டிருந்தும் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

(ஆ) மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் 26 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 423,000 தொகையான நிதி ஏற்பாடுகளில் எந்தச் செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 07 வருமான விடயங்களின் கீழ் அறவிடுவதற்கு மதிப்பிடப்பட்ட ரூபா 7,982,405 கூட்டுத்தொகையான வருமானங்களிலிருந்து எந்தத் தொகையும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

மேலே காணப்படுகின்ற விடயங்களின் பரிகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.3 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

---

மீளாய்வாண்டின் போது சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களில் 03 ஐயவினாக்களுக்காக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுடன் தொடர்புடைய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 2,191,134 ஆகும்.

5.	**முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

**----------------------------------------------------------------**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்
(ஊ) வாகனக் கட்டுப்பாடு